5. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவைக்கு ஓர் அறிவிப்பு.

ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974 செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்றுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 173-வது விதியின்கீழ், 1974-75-ம் ஆண்டிற்கான, பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.